அருவியூர் நகரத்தார் குரல்

ஆண்டு 30 - 182
விசுவாவசு - மாசி

திங்கள் இரண்டுக்கு ஒன்று
கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

மார்ச் 2026
புத்தகம்-2

61 வது கல்விக் காவலர்

திரு சேது நாகராஜன் B.E. M.Sc., – திருமதி சுதா நாகராஜன்

சென்னை – சிங்கப்பூர்

பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பவர்கள்

மகன்–மருமகள்

திரு நாகராஜன் ஹரிஷ் B.E. M.Sc.,
Dr. க. விஸ்வேஸ்வரி M.B.B.S., (Hons) MRCP

மகன்வழிப் பேரன்: ஹரிஷ் ரகுநந்தன்

மகள்: நாகராஜன் நிவேதா B.E.,

வெளியீடு
அருவியூர் வடக்குவளவு நகரத்தார்
கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)
பிரான்மலை

உ
சிவமயம்

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம்

அருள்மிகு மங்கைபாகர் தேனம்மை ஐ.ஏ.எஸ். உருவாக்க நிதி

அனைவருக்கும் வணக்கம்.

2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் தேதி அன்று நடந்த கல்வி வளர்ச்சிக் கழக வெபினார் நிகழ்ச்சியின் போது நமது சமூகத்தின் முதல் ஆட்சியாளர் மரியாதைக்குரிய **S. சொக்கலிங்கம் IAS** அவர்களால் இந்த திட்டம் வெற்றிகரமாக துவக்கி வைக்கப்பட்டது,

மொத்த நிதி : ரூ. 25 இலட்சம்

காலம் : 10 ஆண்டுகள்

நோக்கம் : குறைந்தபட்சம் 10 IAS வெற்றியாளர்களை உருவாக்க இந்த நிதி மூலம் நம் குழந்தைகளுக்கு உதவி

- பல IAS அதிகாரிகளை உருவாக்க தங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு.
- இந்த அருமையான சந்தர்ப்பத்தில் தாங்கள் இணைந்திருங்கள்.
- வரலாற்றில் இடம் பெற இன்றே உங்கள் பங்களிப்பை உறுதி செய்யுங்கள்.

நன்கொடை அளிக்க தொடர்பு கொள்ளுங்கள்
Dr. சோனா இராம், தலைவர். 90033 74690

வங்கி கணக்கு விபரம்

கணக்கின் பெயர்	: அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம் (AVN KALVI VALARCHI KAZHAGAM)
வங்கி/கிளையின் பெயர்	: இந்தியன் பேங்க், பொன்.புதுப்பட்டி
கணக்கு எண்	: 493740102
IFSC	: IDIB000P052

உ
நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்

உதவுவோம்! பண்படுத்துவோம்! பாராட்டுவோம்!

பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!

அருவியூர் நகரத்தார் குரல்

ஆண்டு 31
குரல் 182

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. - குறள் 398

மார்ச் - 2026
ஸ்ரீவிசுவாவசு -
பங்குனி
புத்தகம் - 2

கழக நிர்வாகிகள்

தலைவர்
Dr. சொ. இராமநாதன்,
B.Com., ACA., ACMA., D.Lit., செம்பூதி

செயலாளர்
திரு. V. கணேசன், B.Sc., S. புதூர்.

பொருளாளர்
திருமதி சந்திரகலா இராமநாதன்,
B.Sc., PGDCA., சென்னை

நிர்வாகக் குழு

துணைத் தலைவர்கள்
திரு. MS. இராஜேஸ், MBA., EGMP சென்னை.
திருமதி ஸ்ரீரஞ்சனி மகாபிரபு, B.E.,MBA.,
பொன்னமராவதி.
திரு. சிவ. துரைஅரசு B.Sc., சிறுகுடி.

இணைச் செயலாளர்
திரு. N. பழநியப்பன் M.A., பொன்னமராவதி

துணைச் செயலாளர்
திரு. M. அருணகிரி, சொக்கம்பட்டி

துணைப் பொருளாளர்
திருமதி இளவரசி சங்கர் MCA., B.Ed.,
பொன்னமராவதி

உறுப்பினர்கள்
திரு. R. இராஜேந்திரன் B.Pharm., தஞ்சாவூர்
திரு. V. முத்துக்குமார் MBA., கோவை
செல்வி இராகவி இராஜா MBA
செல்வி பைரவி சக்திவேல் B.Com.,
பொன்னமராவதி

கல்வி நிறுவனக் குழு

தலைவர்
Dr. சொ. இராமநாதன், செம்பூதி

இணைத் தலைவர்
திரு. மா. முருகானந்தம்,
தலைவர், சென்னை அவந சங்கம்

துணைத் தலைவர்கள்
திரு. G. சுப்பிரமணியன்,
செயலாளர், அ.வ.ந. பொதுநலச் சங்கம்
திரு. M. சுவாமிநாதன்,
பொருளாளர், அ.வ.ந. பொதுநலச் சங்கம்
திரு. C. அருணகிரி, கோவை
செயலாளர், அ.வ.ந. சங்கம், கோவை
திருமதி சிவசக்தி இராமநாதன்
துணைத் தலைவர், அ.வ.ந. பொதுநலச் சங்கம்

குரல் நிறுவிய ஆசிரியர்
திரு. சொ. வைத்திலிங்கம் B.E., M.Sc.,
தொடக்கம் : 1997

கௌரவ ஆசிரியர்
திரு. A.P. ஸேதுராமன் B.Com.,
தலைவர் அ.வ.ந. பொதுநலச்சங்கம்

முதன்மை ஆசிரியர்
Dr. சொ. இராமநாதன்

ஆசிரியர் குழு
திரு. N. ஜெகநாதர் B.Sc., M.A.,
திரு. M. செல்லம்
திரு. A. அசோகன்

குரல் பதிப்பாசிரியர்
திரு. சொ. முருகேசன் D.M.E., M.A.,

கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி, புதுக்கோட்டை - 622 407.
kural.nagarathar@gmail.com
அலுவலக வாட்ஸ்அப் : 87783 55837
தலைவர் : 9003374690
sonaram.kvk.thalaivar@gmail.com
செயலாளர் : 78680 74880
பொருளாளர் : 94450 11999
Website : www.avnsangams.co.in
உள் தணிக்கையாளர் :
திரு.CA சூரியா சின்னதுரை, B.Com.,(PA)ACA. DISA
கோவை

கதை, கட்டுரை, கவிதை மற்றும் அனைத்து படைப்புகளும் தங்களின் சொந்த கற்பனையில் எழுதி / டைப் செய்து இமெயிலில் அனுப்ப வேண்டும். வாட்ஸ்அப் மற்றும் இண்டர்நெட்டில் இருந்து எடுத்து அனுப்பும் படைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

குரல் ஆண்டு சந்தா : ரூ.120.00 குரல் ஆயுள் சந்தா : ரூ.1800.00

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக அமைப்பாளர்கள்

தெய்வத்திரு. அ.லெ. முருகன் M.Com., CAIIB

தேசிய நல்லாசிரியர் தெய்வத்திரு. நா. திருநாவுக்கரசு B.A., B.Ed.,

கழகத்தை தலைமையேற்று வளர்த்த செம்மல்கள்

1. தெய்வத்திரு. **சொ. நடராஜன்** B.Com., FCA (1982 - 1983)
2. தெய்வத்திரு. **மு. சண்முகம்** B.E., (1983-1986, 1989-1993, 2006-2009)
3. தெய்வத்திரு. **M.T. காந்தி** (1986 - 1989, 1993 - 1996)
4. திரு. **சொ. வைத்திலிங்கம்** B.E., M.Sc., (1996 - 2002)
5. திரு. **அரு.வே. மாணிக்கவேலு** D.Pharm., (2002 - 2006)
6. தெய்வத்திரு. **சித.கரு. சக்திவேல்** (2009 - 2012)
7. தேசிய நல்லாசிரியர் தெய்வத்திரு.நா. **திருநாவுக்கரசு** B.A.,B.Ed., (2012 - 2015)
8. தெய்வத்திரு. **சுப. துரைராசு** M.Com.,CAIIB ICWAI / DBM (IIB) (2015 - 2018)
9. திரு. **செ. ஆசை அலங்காரம்** B.Sc., (2018 - 2024)
10. Dr. **சொ. இராமநாதன்** B.Com., ACA., ACMA., D.Lit., 2024 முதல் தொடர்கிறார்

நகரத்தார் குரலுக்கு செய்திகள் கட்டுரைகள் அனைத்தையும் 87783 55837 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு அல்லது kural.nagarathar@gmail.com என்ற ஈமெயிலுக்கு மட்டும் தான் அனுப்ப வேண்டும்.

சிறப்பு பொறுப்பாளர்கள்
Directors of the programs

1. திரு. **மா. முருகானந்தம்**
   கல்வி நிறுவனம் தொடங்குதல்
2. திரு. **வே. கணேசன்**
   நன்கொடைகள், குரல் சந்தா + விளம்பர கட்டணங்கள் வசூலித்தல், ஆயுள் உறுப்பினர், பொதுக்குழு மற்றும் செயற்குழு நடவடிக்கைகள், ஆண்டு விழா & மற்ற கூட்ட நிகழ்ச்சிகள், கழக சொத்துக்கள் மற்றும் இதர நிர்வாக செயல்பாடுகள் (திரு. N. பழனியப்பன், திரு. M. அருணகிரி மற்றும் திரு. சிவ. துரை அரசு இணைந்து)
3. திருமதி **சந்திரகலா இராமநாதன்**
   கழக கணக்குகள், தணிக்கை மற்றும் பதிவேடுகள், மாணவ மாணவியர் உதவித்தொகை, கல்விக்கடன் மற்றும் இதர சேவைகள்.
4. திரு. **MS. இராஜேஸ்**
   கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைதல் – வழிகாட்டி நிகழ்ச்சிகள் மற்றும் IAS மங்கைபாகர் நிதி
5. திருமதி **ஸ்ரீரஞ்சனி மகாபிரபு**
   மாரத்தான் போட்டி மற்றும் உடல் நலம் பேணுதல்
6. திருமதி **இளவரசி சங்கர்**
   மனநலம் மற்றும் திறன்மேம்பாடு
7. திரு. **C. அருணகிரி**
   ஆயுள் உறுப்பினர்கள், நன்கொடை யாளர்கள் மற்றும் IAS மங்கைபாகர் நிதி செயல்பாடுகளில் உதவி (திரு. V. முத்துக் குமார் மற்றும் திரு. R. ராஜேந்திரன் இணைந்து)
8. திருமதி. **சிவசக்தி இராமநாதன்**
   குழந்தை வளர்ப்பு மற்றும் குடும்ப நலன்
9. திரு. **சொ. முருகேசன்**
   அருவியூர் நகரத்தார் சமுதாய வரலாறு, புவியியல் மற்றும் பண்பாடு இவைகளை நமது மாணவச் செல்வங்களுக்கு கொண்டு செல்லுதல்.
10. திரு. **N. ஜெகநாதர்**
    அருவியூர் நகரத்தார் குரல் தயாரிப்பு மற்றும் மேன்மைப்படுத்துதல், சந்தா மற்றும் விளம்பரங்களில் உதவி (திரு. மா. செல்லம், திரு. அ. அசோகன் மற்றும் கழக நிர்வாகிகளுடன் இணைந்து)
11. செல்வி **ராகவி ராஜா**
    கழகத்தின் வருங்காலக் கனவுகள் மற்றும் அதன் செயல்திட்ட முன் வடிவ திட்டமிடல், அயல்நாடு வாழ் நம்மவர் குழுமம்.
12. செல்வி **பைரவி சக்திவேல்**
    மாணவர் அணி தேவைகளும் அதை நிறைவேற்ற திட்ட வடிவங்களும்.

உள்ளடக்கம்

வ. எண்	பொருள்	பக்கம்
1.	இளம் வயதிலேயே Chief guest	4
2.	க.வ.க. நிதியினை மேம்படுத்த சுற்றுப் பயணம்	5
3.	அறுபடை	8
4.	இளையான்குடி மாறநாயனார்	13
5.	மருமகள் என்னும் மாமணி	16
6.	K. புதுப்பட்டி தைப்பூச விழா	18
7.	எல்லாவற்றையும் இயற்கை பார்த்துக் கொள்ளுமா	19
8.	சாதனையாளர்	21
9.	புதிய கல்விக்காவலர்கள்	22
10.	நன்கொடையாளர்கள்	23
11.	கனாக் காணுங்கள்	24
12.	இறைவனடி சேர்ந்தோர்	27
13.	கல்விக் காவலர்கள்	28
14.	பன்னிரு திருமுறை முற்றோதல்	31

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

இளம் வயதிலேயே தான் படித்த பள்ளியில்

Chief guest

நாம் ஒவ்வொருவருக்கும் நாம் படித்த பள்ளியிலேயே நம்மை chief guest ஆக அழைத்தால் எப்படி இருக்கும்? மிக மகிழ்ச்சியான பெருமையான நிகழ்வு தானே! எத்தனை பேருக்கு இந்த இளம் வயதிலேயே வாய்க்கும்?

விபரம் கீழே.....

சூரியா தனது சிறுவயதில்

நமது கல்வி வளர்ச்சிக் கழகத்தின் உள் தணிக்கையாளர் திரு. CA. சூரியா சின்னதுரை அவர்களுக்குத் தான் இந்த நிகழ்வு. இவரின் இந்த இளம் வயதிலேயே 2024ஆம் வருடத்தில் அவர் படித்த பாரதி மெட்ரிக் பள்ளியின் 54வது ஆண்டு விழாவிற்கு பள்ளி நிர்வாகத்தினரால் சிறப்பு விருந்தினராக அழைக்கப் பெற்றார்.

அங்கு சூரியா அவர்கள் மாணவ, மாணவியருக்கு சிறப்புரை ஆற்றி, பரிசுகள் வழங்கினார். இது அவருடைய பெற்றோருக்கு மிகுந்த பெருமை சேர்த்த நிகழ்ச்சியாகும்.

மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்

என்ற குரலுக்கேற்ப சூரியா அவர்களின் இந்த நிகழ்வு அமைந்தது பெருமைக்குரியது.

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் தனது வாழ்த்தினையும் பாராட்டுதல்களையும் தெரிவிக்கிறது.

தலைவர் சோனாராம் அவர்கள் கல்வி வளர்ச்சிக் கழக நிதியினை மேம்படுத்த வேண்டியும் மற்ற செயல் திட்டங்களுக்கு ஆலோசனை பெறவும் மேற்கொண்ட சுற்றுப்பயணம்

திருச்சி

அருவியூர்க் கம்பன் அய்யா திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் குடும்பத்தினர், திருச்சி.

இன்று காலை திருச்சி அருவியூர் கம்பன் தெய்வத்திரு **அ.சொ சண்முகம் செட்டியார்** அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தினோம்.

மேலும் அய்யா அவர்களின் எண்ணப்படி நமது கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு IAS நிதியாக ரூபாய் 1 லட்சம் நன்கொடை அய்யா அவர்களின் குடும்பத்தார் வழங்கி உள்ளார்கள். அவர்களுக்கு கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது. கொடையில் சீதக்காதி ஆக நம் சமுதாய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த / என்றும் இருக்கும் அய்யா அவர்களின் குடும்பத்தாருக்கு இதயம் கனிந்த நன்றிகளை ஆனந்தக் கண்ணீர் அஞ்சலியுடன் தெரிவித்து அய்யா அவர்களின் குடும்பத்தார் என்றென்றும் அருள்மிகு தேனம்மை உடனாய மங்கைபாகர் அருள் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்!

தலைவர் சோனாராம் அவர்கள் கல்வி வளர்ச்சிக் கழக நிதியினை மேம்படுத்த வேண்டியும் மற்ற செயல் திட்டங்களுக்கு ஆலோசனை பெறவும் மேற்கொண்ட சுற்றுப்பயணம்

பாலக்குறிச்சி திரு & திருமதி செல்வராஜன் குடும்பத்தினருடன் தலைவர் சோனா இராம் துணைவியார் கல்வி நிறுவனக் குழுவின் துணைத் தலைவர் திருமதி. சிவசக்தி இராமநாதன் மற்றும் க.வ.க இணைச் செயலாளர் திரு. நா. பழனியப்பன்

நத்தம் திரு. ஸ்ரீதர் குடும்பத்தினர்.

திருச்சி திரு. பார்த்திபன் அவர்கள்,

திருச்சி முனைவர் பேராசிரியர் திரு. சண்முகநாதன் & குடும்பத்தினர்.

தலைவர் சோனாராம் அவர்கள் கல்வி வளர்ச்சிக் கழக நிதியினை மேம்படுத்த வேண்டியும் மற்ற செயல் திட்டங்களுக்கு ஆலோசனை பெறவும் மேற்கொண்ட சுற்றுப்பயணம்

தஞ்சாவூர்

நமது செயற்குழு உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்களுடன் இணைந்து தஞ்சாவூர் சங்கச் செயலாளர் திரு. சோலைராஜா மற்றும் முன்னாள் தலைவர் திரு. சிவன்ஜோதி ஆகியோரை சந்தித்த தருணம்.

IAS தேர்வுக்கு தயாராகும் செல்வி. சுப்ரஜா மற்றும் குடும்பத்தினருடன்

தஞ்சாவூரில் இயங்கி வரும் மிகப் பிரமாண்டமான ஆதிகாலத்து அலங்கார மாளிகையின் உரிமையாளர் திரு. மணிகண்டன் அவர்கள் தன் தம்பி மகனுடன்

அறுபடை

தனி ஒரு மனிதனின் மிதிவண்டிப் பயணம்

M. சண்முகம், பொருளாளர்,
அ.வ.ந. சங்கம், பொன்னமராவதி.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் எல்லாம் வல்ல இறைவன் அருளாலும் அனைத்து குடும்ப உறவுகள் மற்றும் நல் உள்ளங்கள் வாழ்த்துக்களுடன் **05.04.2023** பங்குனி **22** புதன்கிழமை காலை **7:00** மணிக்கு பொன்னமராவதி அருள்மிகு ஆவுடை நாயகி சோழிஸ்வரர் சன்னதியில் இருந்து அறுபடைவீடுகளுக்கு மிதிவண்டி பயணமாக அனைவரின் வாழ்த்துக்களுடன் தொடங்கியது.

04.05.2023 அன்று காலை **7:00** மணிக்கு புறப்பட்டு வேந்தன்பட்டி வாருப்பட்டி பிரான்மலை கொட்டாம்பட்டி கருங்காலக்குடி மேலூர் கிடாரிப்பட்டி அழகாபுரி வழியாக என்னுடைய பயணத்தில் முதல் படை வீடாக மாலை **3:10**க்கு மணிக்கு பழமுதிர்ச்சோலை அடைந்து மலையில் உள்ள சுனையில் தீர்த்தமாடி உடன் ஸ்ரீ முருக பெருமானை தரிசித்து திருக்கல்யாணம் வைபோகம் காட்சி அன்று பங்குனி உத்திரம் நிகழ்வில் கலந்து கொண்டு மாலை **5** மணிக்கு அழகர் கோவிலில் ஸ்ரீ பெருமாள் அம்பாள் திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது அதனையும் தரிசித்து மாலை **05.30**மணிக்கு முகம் தெரிந்தவர்களும் அடுத்த பயண பாதையை அறிந்து அப்பன் திருப்பதி மாத்தூர் சர்வேயர் காலனி கே புதூர் தேவர் சிலை பெரியார் பஸ் நிலையம் வழியாக இரவு மாலை **6.30** க்கு இரண்டு மேம்பாலம் வழியாக **07.40** மணிக்கு எனது பயணத்தின் இரண்டாம் படை வீடாக திருப்பரங்குன்றம் அடைந்து அன்றே ஸ்ரீ முருகப் பெருமானை தரிசனம் செய்தது அன்று பங்குனி உத்திரம் நாட்டிய நிகழ்ச்சி சுவாமி வீதி உலா பார்த்து வள்ளுவர் திருமண மஹாலில் இரவு தங்கியது நல்ல ஒரு புது அனுபவம்.

மிதிவண்டி பயணத்தின் இரண்டாம் நாள் **06.00** மணிக்கு வியாழக்கிழமை காலை மண்டபத்தில் காலை கடன்களை முடித்து அதிகாலை மீண்டும் ஸ்ரீ முருகப் பெருமானை வள்ளி தெய்வானை தரிசித்து விட்டு மூன்றாவது படை வீடாக தரிசனம் செய்ய புறப்பட்டு அவனியாபுரம் மாண்டேலா நகர் பெருங்குடி ஆரியூர் காரியாபட்டி கல்குறிச்சி அருப்புக்கோட்டை பைபாஸ் விளக்கு பந்தல்குடி தாப்பாத்தி விளக்கு பைபாஸ் ஹைவேயில் மதியம்பைபாஸ் வழியாக சென்று மதியம் **02.00**

மதிய உணவு **03.00** மணிக்கு தொடர்ந்து மேல்கரந்தை கீழ்கரந்தை வழி சிந்தலக்கரை ஓம் சக்தி ஆலயம் மாலை **05.00** மணிக்கு கோவிலில் உள்ள விடுதியில் குளித்துவிட்டு ஸ்ரீ அம்மன் தரிசனம் **06.04.23.**வியாழன் இரவு தங்கியது.

மூன்றாம் நாள் **07.04.23.**வெள்ளிக்கிழமை காலை **06.00.** மணிக்கு சிந்தலக்கரையில் புறப்பட்டு எட்டையாபுரம் பைபாஸ் எப்பொழுதும் வென்றான் வழியாக சென்று காலை உணவு முடித்துக் கொண்டு புதிய பாலும் தூத்துக்குடி முக்காணி அகரம் சாலையோர பூங்கா சிறிது நேரம் ஓய்வு மீண்டும் மிதிவண்டி பயணமாக தனியாக இறைவன் அருளால் ஆத்தூர் தாமிரபரணி நீராடி மணி ஓட்டலில் மதிய சாப்பாடு தொடர்ந்து பயணித்து மாலை **05.30.** மணிக்கு எனது பயணத்தின் மூன்றாவது படை வீடான திருச்செந்தூர் சென்று உடன் கடலில் நீராடி ஸ்ரீ திருச்செந்தூர் ஸ்ரீ வேலவனை தரிசனம் கண்டு இரவு குறிஞ்சி விடுதியில் தங்கியது தனிநபராக பயணித்தது மிகப் பெரிய ஆனந்தம்.

நான்காம் நாள் **08.04.2023.**அன்று சனிக்கிழமை அதிகாலை கடலில் நீராடி நாழி கிணற்றில் தீர்த்தமாடி **07.00.**மணிக்கு மீண்டும் மூலவர் ஸ்ரீ திருச்செந்தூர் ஆண்டவனை தரிசனம் செய்துவிட்டு மூவர் ஜீவசமாதியை கண்டு அங்கு அடுத்த பயணமாக செல்ல படை வீடுகள் குறித்து பகிர்ந்து அன்று மீண்டும் **11.00.**மணிக்கு அன்னதானத்தில் உணவு அருந்தி தங்கியது.அன்று மாலை **04.00.**மணிக்கு மீண்டும் சைக்கிள் பயணம் அங்கிருந்து அடுத்த படை வீடாக பழனிக்கு பயணமானேன். அடுத்து காரியாபட்டியில் இருந்து சோழவந்தான் வழியாக செல்ல வேண்டும் இரவு தூத்துக்குடி நாடார் ஐயா வீட்டில் தங்கியது புது அனுபவம் ஐந்தாம் நாள் காலை புறப்பட்டு தூத்துக்குடி கீழ ஈரல் தங்கபாண்டியன் மிட்டாய் கடை கடந்து காரியாபட்டியில் பைபாஸ் ஹைவே அய்யனார் ஓட்டலில் தங்கியது.

ஆறாம் நாள் பயணமாக **10.04.23.**திங்கள் கிழமை காலை காரியாபட்டியில் இருந்து மேலக்கோட்டை நடுகோட்டை சின்ன உலகம் அணி பெரிய உலகாணி கூட கோவில் வழியாக காலை டிபனை முடித்துக் கொண்டு திருவேடகம் சோழவந்தான் மதியம் வைகையில் நீராடி மதிய உணவுக்கு பிறகு கொடைரோடு திருமங்கலம் பைபாஸ் காரைப்பட்டி

இரண்டு மேம்பாலம் டோல்கேட் கன்னிவாடி சென்று அன்று இரவு பெருமாள் கோவிலில் தங்கியது நல்லதொரு அனுபவம்.

ஏழாம் நாள் **11.04.23.**செவ்வாய் கிழமை **06.00.**மணிக்கு மிதிவண்டி பயணமாக செம்பட்டி புதுச்சத்திரம் பெருமாள் ரோடு சத்திரப்பட்டி வழியாக காலை **09.00.**எனது படை பயணத்தின் நான்காம் வீடு பழனிக்கு சென்று அடைந்தது.அன்று காலை **10.30.**மணிக்கு ஸ்ரீ பழனி ஆண்டவரை தரிசித்து விட்டு மதியம் கோவில் அன்னதானத்தில் உணவு அருந்தியது மாலை புறப்பட்டு நாள்தோறும் என்னுடன் தொடர்பு கொண்டவர்களுக்கு உடனுக்குடன் அலைபேசியில் எல்லா உறவுகளும் பேசி வாழ்த்து சொன்னார்கள் நானும் என்னுடைய அலைபேசியில் எடுத்த போட்டோக்களை அனைவருக்கும் பகிர்ந்து மகிழ்ச்சி அடைந்தேன் அன்று அதாவது மறுநாள் ஸ்ரீ ஆறுமுகசாமி குருபூஜையில் கலந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் சென்று வந்தேன்.**11.04.23.**நமது அ.வ.ந.ச.பழனி படத்தில் இரவு தங்கியது.எட்டாம் நாள் **12.04.23.**புதன்கிழமை காலையில் சண்முக நதியில் குளித்துவிட்டு மீண்டும் மலைக்குசென்று ஸ்ரீ பழனியாண்டவர் தரிசனம் செய்து பகல் பொழுது தங்கி விட்டு இரவு விடுதியில் தங்கியது

ஒன்பதாம் நாள் **13.04.2023.**வியாழன் அன்று காலை புறப்பட்டு எனது பயணத்தின் ஐந்தாம் படை வீடான சுவாமிமலைக்கு செல்ல வேண்டும் அதன் பயணமாக குற்றம் சத்திரம் அத்திக்கொண்பை பேதை இருப்பு வேடசந்தூர் ஏரியோடு அயலூர் வையம்பட்டி பைபாஸ் மணப்பாறைக்கு மாலையில் வியாழன் என்று கற்பகம் விடுதியில் தங்கியது பத்தாம் நாள் **14.04.23.** அன்று சித்திரை தமிழ் வருட பிறப்பு வெள்ளிக்கிழமை காலை கடன்களை முடித்துவிட்டு பயணமாக மணப்பாறையில் இருந்து பைபாஸ் கள்ளு குடி கருமண்டபம் திருச்சி பஸ் நிலையம் காலையில் வந்து சேர்ந்தது அன்று பகல் முழுவதும் தரிசனம் காலையில் காவிரியில் நீராடி ஸ்ரீ ரங்கநாதரை தரிசனம் பார்த்து அன்னதானத்தில் கலந்து கொண்டு உடன் திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரி பார்த்து பிறகு உச்சிப்பிள்ளையார் கோவில் தாயுமானவர் ஆலயம் உறையூர்

வெக்காளியம்மன் ஆலயம் அன்று இரவு தேர்த்திருவிழா காட்சி நடந்தது மிகவும் சிறப்பு அன்று திருச்சியில் இரவு தங்கியது.

பதினோராம் நாள் **15.04.23.**சனிக்கிழமை காலை அன்பு சுமதி ரக்சன்**,** மகிழினி என்னை காண பார்க்க வந்தார்கள் அதோடு காலை மதியம் உணவு அருந்தி மீண்டும் ஐந்தாம் படை வீடான சுவாமிமலை செல்ல வேண்டும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது வாழ்த்துக்கள் சொன்னார்கள் இறைவனை என்றும் மறக்க மாட்டேன்.

மாலை**04.00.** மணிக்கு சுவாமிமலை செல்வதற்கு ஆயத்தமாக மீண்டும் ஹெட் போஸ்ட் ஆபீஸ் மார்க்கெட் தெப்பக்குளம் அண்ணா சிலை மேம்பாலம் திருவானைக்காவல் தெற்கு புறவாயில் வழி கொண்டையம்பேட்டை தெற்கு புறவழியில் கல்லணைக்கு மாலையில் சென்று அங்கு கல்லணையில் நீராடி அந்த சுப்பிரமணிய கோவிலில் இரவு தங்கியது புது அனுபவம்.

பனிரெண்டாம் நாள் **16.04.23.**ஞாயிறு காலை **06.00.**மணிக்கு புறப்பட்டு கோவிலடி வழி பைபாஸ் திருவையாறு காலையில் சென்றது அங்கு குளித்துவிட்டு ஐயாரப்பர் தரிசனம் அதன் பிறகு என்னைக் காண தஞ்சையில் இருந்து குடும்ப உறுப்பினர்கள் வாழ்த்தி பார்த்துவிட்டு சென்றார்கள் சிறப்பாக இருந்தது பகல் பொழுது தங்கி விட்டு மீண்டும் பயணமாக திருப்புவனம் வழி மாலையில் தாராசுரம் சென்று சுவாமிமலையில் ஸ்ரீ முருகப் பெருமானின் தரிசனம் பார்த்தது.

பதிமுன்றாம் நாள் **17.04.2023** திங்கள் கிழமை காலை மீண்டும் சுவாமிமலை செந்தில் ஆண்டவனை தரிசித்தவுடன் புறப்பட்டு கும்பகோணம் பைபாஸ் மீன்சுருட்டி கொரடாச்சேரி வழியாக வடலூர் சத்திய ஞான சபை இரவு சென்றது அங்கு இரவு தங்கி மறுநாள் **14** ஆம் நாள் சைக்கிள் பயணம் செவ்வாய்க்கிழமை மேட்டுக்குப்பம் தீஞ்சுவை நீரோடை சித்தி வளாகம் சென்று தரிசனம் இரவு காலை மதியம் வள்ளலார் உணவு கூடத்தில் உணவு அருந்தியது.

18.04.23.மாலை **03.00** மணிக்கு புறப்பட்டு விக்கிரவாண்டி வழி பண்ருட்டி காடுவெட்டி கூட்டுச்சாலை வழி பைபாஸ் விழுப்புரம் சூரியா

பவுண்டேஷன், சாரங்கபாணி ஆறு கடந்து கோலியனூர் ஸ்ரீ .புற்று காத்த அம்மன் ஆலயம் இரவு தங்கியது புதிய புதிய அனுபவங்கள்

பதினைந்தாம் நாள் **19.04.2023.**புதன்கிழமை காலை **06.00.** புறப்பட்டு கோழியனூர் புறப்பட்டு விக்கிரவாண்டி பைபாஸ் அரசூர் காட்டேரி ராமலிங்க நகர் மீச நல்லூர் வழியாக மதியம் தர்ம சாலையில் உணவு தொடர்ந்து பெருநகர் வந்தவாசி காஞ்சிபுரம் டவுன் வழியாக சென்று இலவச தங்கும் விடுதியில் இரவு தங்கியது புதுப்புது சம்பவங்கள் நிகழ்வுகள்.

பதினாறாம் நாள் **20.04.2023.**வியாழன்று நிறைவான நாள் காலை **06.00.**மணிக்கு புறப்பட்டு அன்று அமாவாசை தினம் தொடர்ந்து அரக்கோணம் செய்யாறு பைபாஸ் சேந்தமங்கலம் வழி அறுபடை வீடுகளான திருத்தணி அடைந்து மயில் வாகனமான மிதிவண்டியில் மலைக்கு மேல் சென்று அருள்மிகு முருகன் பெருமானை வள்ளி தெய்வானையுடன் மேளம் தாளம் முழங்க திருமண காட்சி கிடைத்தது **20.04.2023.**பேரானந்தம் அறுபடை வீட்டுக்கு மிதிவண்டியில் தனி நபராக அவன் அருளாலே அவன் தான் வணங்கி பரவசம் அடைந்து நாள். அதன் பின் என் மகன் விஜய் மருமகள் கார்த்திகா பேரன் வெற்றி மூவரும் என்னை காண என் அறுபடை தரிசன நிறைவு செய்து வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டோம் இன்னும் என்னில் நிழலாக புரிகிறது இந்த அறுவடை பயணம் வெற்றி அடைய காரணமாய் இருந்து என்னுடன் பயணித்த பஞ்ச பூதங்கள் நவகிரகங்கள் கோடான கோடி நட்சத்திரங்கள் மிதிவண்டி பயணத்தை அரசல் புரசலாக சொல்லும்போது என்னுடைய வாழ்க்கையில் **36** ஆண்டுகள் பயணித்த அன்புக்கு பாத்திரமான மனைவி மோகனா அன்பு எந்தவித கருத்துக்களை பகிராமல் மானசீகமாக மனதார சங்கல்பம் செய்து மனதோடு வாழ்த்தியது என்னுள் வெளியே பகிர முடியாது அதை சொல்லவும் கூடாது வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன் என் பயணத்தில் தொடர்ந்து என்னை கண்காணித்து தொடர்ந்து வாழ்த்துக்கள் பகிர்ந்து அனைவரும் அனைத்து உறவுகளுக்கும் என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

இளையான்குடி மாறநாயனார்

M. அன்புப்பிரியாள், பொன்னமராவதி

பரமக்குடிக்கு அருகிலுள்ள இளையான்குடியில் வேளாளர் குலத்தில் மாறநாயனார் அவதரித்தார். இவர் விவசாய தொழில் செய்து பெரும் செல்வந்தராக வாழ்ந்து வந்தார். தன்னைத் தேடி வந்த சிவனடியார்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அவர்களுக்கு அறுசுவையோடு அன்னமிடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். செல்வந்தராக இருப்பதால் தானே அடியார்களுக்கு உணவளிப்பார். மாறனாரின் உயர்ந்த தன்மையை உலகறியச் செய்ய திருவுள்ளம் கொண்ட எம்பெருமான் வளம் கொழிக்கும் காலத்து மட்டுமின்றி வறுமை வாட்டும் காலத்திலும் அடியாரைப் போற்றி பேணும் தன்மையுடையவர் என்பதை உலகுக்கு உணர்த்த மாறனாருக்கு வறுமையை உண்டாக்கினார் சிவபெருமான்.

தன் செல்வத்தை எல்லாம் விற்று அடியாருக்கு உணவளித்தார். எல்லா செல்வத்தை விற்றபின் ஒரு சாதாரண குடிசையில் வாழ்ந்து வந்தார். இளையான்குடி மறைநாயனார். ஒரு நாள் வயலில் வேலை செய்துவிட்டு வந்து உணவு எதுவும் இல்லாததால் ஒரு செம்பு நீரை இவரும் இவரது மனைவியும் அருந்திவிட்டு உறங்க சென்றனர். அப்போது வீட்டு வாசலில் அடியார் ஒருவர் வந்து நின்று, “அடியார் வந்திருக்கிறேன் அன்னம் பாவித்து அருள்வார்களா” என்று வினவ இறையான்குடியாரோ உணவு எதுவும் இல்லாததால் திகைத்து நின்றார். அவரது துணைவியாரோ, “அடியாரை உள்ளே அழைத்து வாருங்கள்'' என்றார். அடியாராக வந்த சிவபெருமானை உள்ளே அழைத்து “சுவாமி! சில நிமிடம் இளைப்பாருங்கள்” என்று சொல்லி ஒரு கந்தல்

துணியைக் கொடுத்து மழையில் நனைந்தவரை துடைக்கச் சொன்னார். அடுப்பங்கரைக்குச் சென்ற மனைவி எல்லா பாத்திரத்தையும் தடவிப் பார்க்க எதுவும் இல்லாததால் இளையான்குடியாரை அழைத்து “நேற்று விதைத்த நெல்கள் எல்லாம் இந்த மழையில் ஊறி மேலே வந்திருக்கும். அதை இந்த கூடையில் அரித்து எடுத்து வாருங்கள்” என அனுப்பி வைத்தார். அவரும் அதை சேகரித்து கொண்டுவர இவரது துணைவியார் நெல்லை அரிசியாக்கி வடிக்க, அடுப்பிலே நெருப்பு மூட்டுவதற்கு விறகு இல்லாததால் இளையான்குடியாரை அழைத்து தங்களுடைய குடிசை வீட்டில் ஒரு பகுதியில் உள்ள கூரை மற்றும் மூங்கிலை ஒடித்துக் கொண்டுவர சொன்னார்; அடுப்பில் தீமூட்டி ஈரமான நெல்லை வறுத்து, குத்தி, அரிசியாக்கி அதை பக்குவமாக சாதகமாக சமைத்தார்; அதற்கு தொட்டுக்கொள்ள எதுவும் இல்லாததால் கொல்லைப்புறத்தில் கீரையைப் பறித்து சுவையான கறியமுதம் செய்தார்.

அடியாரை, “திருவமுது செய்ய எழுந்திருங்கள்” என்று அழைத்தவுடன் “அவர் “நான் மிகவும் பசியாக இருக்கிறேன். அமுதினை எடுத்து வா” என்றார். உணவு பதார்த்தங்களை எடுத்து வந்து பார்க்க அடியாரைக் காணவில்லை. வெளியில் மழை பெய்து கொண்டிருக்க சுவாமி! சுவாமி!! என்று அழைத்து வெளியே சென்று பார்க்க வானத்தில் ஒரு ஒளிப்பிழம்பு தோன்ற அங்கு சிவபெருமான் உமா தேவியாருடன் காட்சி தந்தார். இருவரும் கண்ணில் தாரைதாரையாக கண்ணீர் மல்க ஆனந்தத்தோடு இந்தக் காட்சியைக் காண நாங்கள் என்ன தவம் செய்தோமோ என மகிழ்வுற்றனர். இவ்வளவு நாளாக பட்ட வேதனை, வறுமை, துன்பம் எல்லாம் மறந்து இறைவனிடம் எதுவும் கேட்காமல் “உங்களை தரிசித்ததே நாங்கள் செய்த புண்ணியம்” என்று கூறி இறைவனுடைய திருவடியில் விழுந்து வணங்குகின்றனர். “எம்பெருமான் அடியாரிடம் நீ என் மேல் உள்ள பக்தியினால் வறுமையிலும் செல்வந்தனாக உணவளித்தாய். பக்தி உன்னிடத்தில் நிலையாக இருந்த காரணத்தால் இனி உன்னிடத்தில் செல்வம் குறையாமல் செல்வந்தனாகவே இருப்பாய் எத்தனை அடியார்கள் வந்தாலும் குறையாத செல்வம் என்றும் உன்னிடத்தில் நிலைத்து நிற்கும்” என்று கூறி “அன்பனே! நீ உன் மனைவியோடு எனது சிவலோகத்தினை அடைந்து பேரின்பம் அனுபவித்திருப்பாயாக” என்று அருள் செய்து மறைந்தார்.

இளையான்குடி மாறநாயனாரிடமிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது வறுமையிலும் பக்தியையும், கொள்கைகளையும் மாறாமல் வாழ்வதே.

இவருடைய குருபூஜை ஆவணிமாதம் மகம் நட்சத்திரம்.

காதணி விழா

பூர்வீகம் சொக்கம்பட்டி, சென்னை திரு A.S. முருகேசன் செட்டியார் - மு. கலைச்செல்வி ஆச்சி இவர்களின் மகன் திரு மு. பிரகாஷ்குமார் – P. யாமினி, (திண்டுக்கல் மதிப்பிற்குரிய சம்பந்தி திரு K. பிரபாகரன் செட்டியார் – P. செண்பகமலர் ஆச்சி இவர்களின் மகள்) இவர்களின் புதல்வனும் எங்களின் பேரனுமான செல்வன் **P. யுகனுக்கு** 6.2.26 அன்று மதுரை அழகர்கோவிலில், உறவினர்கள் முன்னிலையில் முடி காணிக்கை கொடுக்கப்பட்டது.

பின்னர் 8.2.2026 ஞாயிற்றுக்கிழமை, திண்டுக்கல் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் மண்டபத்தில் காலையில் **P. யுகனுக்கு** காதணி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. உறவினர்கள், பெரியவர்கள், நண்பர்கள் வியாபாரப் பிரமுகர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் அனைவரும் கலந்து கொண்டு, குழந்தையை வாழ்த்தி ஆசீர்வாதம் வழங்கினார்கள்.

தகவல் : A.S. முருகேசன்,

பொருளாளர், சென்னை அ.வ.ந. சங்கம் & 50வது கல்விக்காவலர்.

உ
சிவமயம்

அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

உஷா ஜுவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்

**77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,
பீபீ குளம், மதுரை–2.**

:7373073738

மருமகள் எனும் மாமணி

பெற்றவர் பிரிந்து புகுந்தகம் வந்தாய்!
உற்றவர் தம்மையும் உடனே ஏற்றாய்!
இல்லத்து ஒளியாய் ஏற்றம் தந்தாய்!
நல்லறம் காக்கும் நங்கையாய் நின்றாய்!
அன்னையாய் மாறி அன்பினைப் பொழிந்தாய்!
தன்னலம் இன்றித் தியாகம் செய்தாய்!
மாமன் மாமி மனமகிழ் வுற்றே
செய்என உன்னைச் சேர்த்தே அணைக்க
உறவின் முறைகள் உயிர்ப்பாய் மாற
அறிவுக் கனியாய்அகம்நிறைந் திருந்தாய்!
விளக்கினை ஏற்றிய விடிவெள்ளி நீயே!
துளக்கமில் லாது துணையாய் நின்றாய்!
வீட்டின் பெருமை வியப்பாய் வளரக்
கூட்டும் குடும்பக் குலவிளக் கானாய்!
இன்சொல் பேசி இதயந் திறந்தாய்!
புன்சிரிப் பாலே பொலிவைத் தந்தாய்!
மகள்என உன்னை மார்தட்டிச் சொல்லும்
தகுதி நிறைந்த தையல்நீ அன்றோ
காலம் முழுதும் கண்மணி யாக
ஞாலம் போற்ற நலம் பல பெற்று
இன்பம் பெருக இனிதுநீ வாழ்க!
உன்பெயர் நிலைக்க உரமுடன் வாழ்க!
பிணைக்கும் உறவின் பெருமிதம் நீயே!
அணைக்கும் அன்பின் அடையாளம் நீயே!

கவிக்கதிரோன்
கு. கணேசன்,
கோவை.

உ

வாழ்க வளமுடன்

லெட்சுமி பைனான்ஸ்

நகை அடகு கடை

55, மேலரத வீதி, **பொன்னமராவதி**

கூடுதல் தொகை | **குறைந்த வட்டி** | **அதிக பாதுகாப்பு**

தங்க நகை கடனுக்கு....

வட்டி 1.50★ மட்டுமே!

★ நிபந்தனைக்குட்பட்டது

உங்கள் பணத்தை பாதுகாக்க...

FIXED DEPOSIT உண்டு!

முத்தான 3 திட்டங்கள்

மாத பென்சன் திட்டம் - **9% வட்டி**

(ஒவ்வொரு மாதமும் வட்டி பெறலாம்)

ஆண்டு டெபாசிட் திட்டம் - **12% வட்டி**

5.5 ஆண்டு 1+1 திட்டம் - **18% வட்டி**

(டெபாசிட் தொகையை 2 மடங்காக திரும்ப பெறலாம்)

சிறப்பு சலுகை ஊக்கப்பரிசு

நவம்பர், டிசம்பர் மாதங்களில் செய்யும் டெபாசிட்டுக்கு...

உடனடி ஊக்கத்தொகை 1.00% உண்டு

PL.A. ஜுவல்லர்ஸ்

செட்டியார் நகை கடை & அடகு கடை

55, மேலரத வீதி, பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி

சீல் PL

916 HALLMARK CERTIFIED JEWELLERY

916, KDM ஹால் மார்க் தங்க நகை வியாபாரம்

மேலும் விபரங்களுக்கு **98425 20519 98421 34567**

K. புதுப்பட்டி தைப்பூச விழா கொண்டாட்டம்

குமரன் செட்டியார் வகையறா (மேலூருடையார்)

01-02-2026 ஞாயிறு அன்று சுயம் பெருமாள் மண்டகப்படியில் K. புதுப்பட்டி குமரன் செட்டியார் வகையறா குடும்பத்தினர் திருவாளர்கள் அலங்காரகுமரன், செல்வகுமார், வெற்றிவேல் மற்றும் மணவை சரவணன், மதுரை ஏகாம்பரம் செட்டியார் மற்றும் பெரியோர்களால் தைப்பூச திருவிழா சிறப்பாக நடந்தது. விழாவுக்கு வந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அனைவரும் இறையருள் பெற்றனர். உமாபதி சிவாச்சாரியாரால் பரிவட்டம் சிறப்பாக கட்டப்பட்டு இனிதே திருவிழா நடந்தது.

மண்டபத்தில் விநாயகர் ஒரு பல்லக்கில் இருந்தும், வள்ளி தெய்வானை, முருகன் மூன்று தெய்வங்களும் ஒரு பல்லக்கிலும் இருந்தவாறு அருள்பாலித்தனர்.

தகவல் : A.S. அலங்கார குமரன், K. புதுப்பட்டி.

திருமண நிகழ்வு

மணமகன் : செல்வன் **இரா. விக்னேஷ்** B.B.A.,

மணமகன் பெற்றோர் : கோவை (சொக்கம்பட்டி)

திரு. ராமச்சந்திரன் செட்டியார் – திருமதி ரா. மாலதி ஆச்சி

மணமகள் : செல்வி **S. புனிதவதி** B.Sc., (CS)

மணமகள் பெற்றோர் : சத்தியமங்கலம் (குளத்துப்பட்டி)

திரு மா. சண்முகநாதன் செட்டியார் – திருமதி ச. ஈஸ்வரி ஆச்சி

நிகழ்விடம் : அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்க மங்கைபாகர் தேனம்மை திருமண மண்டபம், பிரான்மலை.

மணநாள் : 28.01.2026 புதன்கிழமை

எல்லாவற்றையும் இயற்கை பார்த்துக்கொள்ளுமா?

உண்பதற்காக உழைக்கிறோமா?

உழைப்பதற்காக உண்கிறோமா?

இந்த இரண்டு வித்தியாசத்தின் இடையில் தான் உலகம் சிக்கியுள்ளது. மனித வாழ்வுக்கு அடிப்படை காற்று, நீர், உணவு, நிலம். இவற்றிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் எதுவும் வளர்ச்சியாக இருக்க வாய்ப்பே இல்லை.

வளர்ச்சி என்பது எது? காற்றில் நஞ்சு, உணவில் நஞ்சு என எல்லாவற்றையும் அழித்து விட்டு மாடமாளிகையில் வசிப்பதா? சமூக அந்தஸ்திற்காக 20 ஆடைகள் வைத்திருப்பதா? காரில் செல்வதா? நகைகள் அணிவதா? இப்படி எதுவும் இருக்க வாய்ப்பே இல்லை. இதைப் பெற பணம் இருந்தால் அடைந்து விடலாம். ஆனால் இதுதான் வளர்ச்சி என்று நினைத்து உலக மக்கள் அனைவரும் பணம் தேடிச் சென்றுவிட்டால் உணவுக்கு என்ன செய்வோம்?

இந்தச் சமுதாயம் மேற்சொன்னவர்களை தான் வளர்ச்சி அடைந்தவர்கள்; நாகரீகம் தெரிந்தவர்கள் என்று புகழ்கிறது. இப்படி புறப்பட்டு வாழ்வை இழந்த பலர் எது வாழ்க்கை என்று தெரியாமல் இன்று தவித்துக் கொண்டு தான் இருக்கின்றனர். மகாத்மா சொல்கிறார் நாகரீகம் என்பது பொருளை சேர்ப்பதில் இல்லை. குறைப்பதில் தான் இருக்கிறது. மிகை நுகர்வில் வசித்து நாகரீகத்தின் உச்சத்தில் இருக்கிறோம் என சொல்லிக்கொள்ளும் அனைவரும் உங்கள் வாயில் சோற்றை வைக்கும் பொழுது ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உங்களைப் போல நாகரீகம் அடைய வேண்டும் என உலகம் முழுவதும் நினைத்து விட்டால் உங்களுக்கு சோறு, உங்கள் வீட்டில் உள்ள சுவற்றின் மண் தான். அதை சுரண்டி தான் உண்ண வேண்டிய நிலை ஏற்படும்.

இந்தியாவில் 20 ஆண்டுகளில் 85% விவசாயத்தை நம்பியிருந்த மக்கள் 52% ஆக குறைந்து விட்டனர். ஒரு பக்கம் புவி வெப்பம் அடைந்து வருகிறது. காரணம் தொழிற்சாலைப் புகை, வாகனப் புகை, இயற்கையின் வளத்தை அழித்து

உருவாக்கிய ஆடம்பரப் பொருட்கள். கரியமிலவாயுவை பிராணவாயுவாக மாற்றுவதில் முதல் பங்கு வகிப்பது கடல். அதற்கு அடுத்ததாக மரங்கள், பாறைகள், பாறைகளை, மரங்களை வெட்டி கட்டிடங்கள், சாலைகள் வீடுகளாக கட்டிவிட்டோம். 90% carbon dioxide கடல் உள்வாங்கி விட்டது. எஞ்சி இருப்பது 10% மட்டுமே என கூறுகிறது ஆய்வு. இந்தச் சூழல் நீடித்தால் 10 ஆண்டுகளுக்கு மேல் நம் உலகம் தாங்காது. இங்கு சுவாசிக்க காற்று இருக்காது. இதனை தொடர்ந்து வெப்பம் அதிகரித்து பனிமலை உருகி கடல் நீர் மட்டம் அதிகரித்து நிலத்திற்கு வரும் நிலை ஏற்படும். நாம் எதை மாற்றிக் கொள்ளப் போகிறோம்.

புவியின் அதிக வெப்பத்தினால் நிலத்தில் விதை முளைக்காத நிலை ஏற்படும். உணவிற்கு என்ன செய்வோம். இவ்வாறே தொடர்ந்தால் இறுதியில் வேளாண்மைக்கும் வேலை இல்லாமல் போய்விடும். அனைவரும் வங்கி பணியாளர், ஐடி, மென்பொருள் துறையில் வேலை என கிளம்பிவிட்டால் அது வளர்ச்சி இல்லை. எதைச் செய்தாலும் தனக்கான உணவைத் தான் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். உணவிற்கு விலை கிடையாது. ஆனால் பணத்தை வைத்து வாங்குவதால் அதற்கு விலை நிர்ணயம் செய்கிறோம். இதற்குத் தீர்வு வேளாண்மையாக மட்டுமே இருக்க முடியும். இதைத்தான் நம்மாழ்வார் கையில் எடுத்தார். எளிமையான வாழ்வை வாழ்ந்து காட்டினார். 3 தலைமுறைக்கு வாழ்ந்த வாழ்வும் சிறப்பிற்குரியது.

எல்லாவற்றையும் இயற்கை பார்த்துக் கொள்ளும் என்ற மந்திரம் இனி பலிக்காது. அதற்கு நாம் இயற்கைக்கு இசைவாக செயலாற்ற வேண்டும்.

– ஆசிரியர் குழு

சாதனையாளர்

சிவகங்கை மாவட்டம் S. புதூர் ஒன்றியம் S. புதூர் கிராமத்தை சேர்ந்த திரு அண. சுப்பையா செட்டியார் – தெய்வத்திரு குஞ்சரம் ஆச்சி அவர்களின் மூத்த மகன், முனைவர் A.S. மயிலப்பா அவர்கள், இம்பாலின் மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ், அருணாச்சல பிரதேச மாநிலத்தின் East Siang மாவட்டத்தில் உள்ள பாசிகாட் (Pasighat) எனும் ஊரில் இயங்கி வரும் தோட்டக்கலை மற்றும் வனவியல் கல்லூரியில், மூத்த பேராசிரியராக (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்) பணியாற்றி வருகிறார் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இவர், தனது எண்ணிலடங்கா சாதனைகளின் தொடர்ச்சியாக, தற்போது, இயற்கை வள மேலாண்மை துறை தலைவராக பதவி உயர்வு பெற்றுள்ளார் என்ற சிறப்பான செய்தி, நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் தேடி தருவதாக அமைகிறது.

குறிப்பிடத்தக்க சிறந்த சாதனைகள் :

Awards - International	:	**11**	Awards - National	:	**25**	Awards - Regional	:	**1**
Awards - State	:	**3**	Awards - University / Institutional	:	**10**	Awards - Others	:	**2**
Books	:	**22**	Book Chapters	:	**65**	Research Papers	:	**30**
Abstracts	:	**20**	Practical Manuals / Training Manuals / Technical Bulletins				:	**> 30**
Popular Articles	:	**4**	Others (Reports)	:	**8**	Projects Completed	:	**20**
Guidance of PG and Ph.D Students	:	**> 40**	University Gold Medal	:	**2**	Associate Editor	:	**2**
Founder & CEO	:	**1**	Esteemed Reviewer for International Journals	:	**5**	Transfer of Technology	:	**1**

இவரது இந்த சாதனைகள் மென்மேலும் தொடர, நமது கல்வி வளர்ச்சி கழகத்தின் சார்பாக வாழ்த்துவதோடு மட்டுமல்லாமல், எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

புதிய கல்விக்காவலர்கள்

கல்விக்காவலர் - 58

(நாவலூருடையார்)
ச. சொக்கலிங்கம் செட்டியார்
சொ. தனபாக்கியம் ஆச்சி (உலகம்பட்டி)

கல்விக்காவலர் குடும்பத்தினர்

பெற்றோர் : தெய்வத்திருவாளர்கள்
த. சண்முகம் செட்டியார் – ச. சிவனம்பாள் ஆச்சி
மாமனார் மாமியார் : தெய்வத்திருவாளர்கள்
பழ. சுப்பையா செட்டியார் – சு. ஈஸ்வரி ஆச்சி
மகன்கள் – மருமகள்கள் :
சொ. முருகேஷ் D.Pharm., – மு. விசாலாட்சி B.Com,
சொ. செந்தில்குமார் D.Pharm.,B.A.,– செ. சுதா B.Com,
பேரன் பேத்திகள் :
சொ.மு. சிவக்குமார் M.Sc., – செ.பா. அபிநயா B.Sc.,
செல்வன் சொ.செ. குமரவேல் M.Sc., செல்வி சொ.மு. திவ்யா MBA.,

கல்விக்காவலர் - 59

மேலூருடையார்
தீ.ப. பொன்னுச்சாமி செட்டியார்
அன்னமயிலி ஆச்சி (செம்பூதி)

கல்விக் காவலர் குடும்பத்தினர்

மகள் – மருமகன்கள் :
திருமதி. கரு. ஜோதிமணி ஆச்சி–திரு. சித. கருப்பையா செட்டியார்
திருமதி. சிவயோகம் ஆச்சி–திரு. சொ. வைத்திலிங்கம் செட்டியார்
திருமதி. செ. இராஜேஸ்வரி ஆச்சி–திரு. ராம. செல்வராஜ் செட்டியார்
மகன் – மருமகள் : அரசு மெடிக்கல்ஸ், கோவை
திரு. A.P. ஸேதுராமன் B.Com., – திருமதி. S. விஜயலட்சுமி ஆச்சி
பேரன், பேத்திகள் :
Dr. P.S. ஸ்ரீகுமார் MDS., MBA – S. ராஜாத்தி B.Com.,FCA., LCS
P.S. ஸ்ரீராம் BBM MBA – K.R. பிரியங்கா ஸ்ரீராம் M.E.,
மகன் வழிப் பேத்தி : S. சுவாதி
திருமதி P.S. ஸ்ரீரஞ்சனி மகாபிரபு B.E., MBA – திரு. மகாபிரபு B.E.,
மகள் வழிப் பேத்தி : MA . பிரபஞ்சனி – பேரன் : M. நிரஞ்சன்

கல்விக்காவலர் - 60

பொன்னமராவதி திருவப்பூருடையார்
பெ. சின்னத்துரை செட்டியார் -
சி. ஜீவராணி ஆச்சி (சொக்கம்பட்டி)
கோயமுத்தூர்.

கல்விக் காவலர் குடும்பத்தினர்

பெற்றோர் :
தெய்வத்திரு பெ.சி. பெரியதம்பி செட்டியார் –
நலமுடன் திருமதி பெ. கோசலம் ஆச்சி
மாமனார் மாமியார் :
திரு. ந. இராஜாங்கம் செட்டியார் – திருமதி. தமிழரசி ஆச்சி
மகன் மருமகள் :
C. சூர்யா B.Com.,(PA)A.C.A., DISA – நிருபமா M.Tech.,(Chem. Eng) B.A., (Hindi)
மகள் : செல்வி C. பிரசாந்தி B.Com.,(CA) LLB

கல்விக்காவலர் - 61

S. சேது நாகராஜன் -
சுதா நாகராஜன்
(சென்னை / சிங்கப்பூர்)

கல்விக் காவலர் குடும்பத்தினர்

பெற்றோர் : தெய்வதிரு. சேது பாண்டியன் செட்டியார் –
தெய்வதிருமதி. சிந்தாமணி ஆச்சி கிருங்காக்கோட்டை
மாமனார் மாமியார் : திரு. ராம சின்னான் செட்டி. –
திருமதி டெய்சி இராணி சின்னான் செட்டி.
மகன் மருமகள் :
திரு. நாகராஜன் ஹரீஷ் B.E., M.Sc., - க. விஸ்வேஸ்வரி MBBS (Hons) MRCP
மகள் : நாகராஜன் நிவேதா B.E.,

2023-24ஆம் ஆண்டில் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள்

மாபெருங்கொடை வள்ளல்கள் :

1. திரு. **A.P. ஸேதுராமன் - விஜயலட்சுமி,** கோவை.
2. திரு. செல்வன் **R.M. செந்தில்,** பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. இராமநாதன் - சிவசக்தி,** (செம்பதி) துபாய்.
4. திரு. **AP. ஜெயபால்,** திரு. **AP. மணிகண்டன்,** அலங்கார மாளிகை, பொன்னமராவதி.

பெருங்கொடை வள்ளல்கள் :

1. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் - பாப்பா ஆச்சி,** மதுரை.
2. தெய்வத்திரு. **STKR. சக்திவேல்** நினைவாக **S. ராஜலெட்சுமி,** பொன்னமராவதி.

கொடை வள்ளல்கள் :

1. திருமதி. **இராம. லதா** அவர்கள், நத்தம்
2. திரு. **து. அரவிந்த் குமார் B.E., M.S., – பத்மா, B.E.,** சென்னை.
3. திரு. **ம.சி.கு.கு. கணேசன் செட்டியார் - தென்னரசி ஆச்சி,** கோவை.

வள்ளல்கள் :

1. திரு. **M. பாலகிருஷ்ணன் - பானுமதி ஆச்சி,** சிங்கம்புணரி.
2. திரு. **செ. ஆசை அலங்காரம்** குடும்பத்தார், சிறுகுடி.
3. திரு. **M.S. முருகப்பன்,** பொன்னமராவதி.
4. திரு. **சொ. முருகேசன் - கவிதா,** சிவகாசி.
5. திரு. **A. முருகன் - செல்வமணி,** நீடாமங்கலம்.
6. திரு. **T.M.R.S. சிவக்குமார் - அருணோதயம்,** கோவை.
7. திரு. **அ. சந்திரமோகன்,** கே. புதூர், மதுரை.
   (தெய்வத்திருவாளர்கள் **சி. அருணாசலம் செட்டியார் - சாந்தா ஆச்சி** நினைவாக)

6-12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் நன்கொடையாளர்கள்

1. சிங்கம்புணரி **மீனாட்சி நல்லதம்பி,** வலச்சேரிப்பட்டி **தெய்வானை வள்ளியப்பன்** நினைவாக **அவந பொதுநலச் சங்கம்,** பிரான்மலை.
2. தெய்வத்திரு. **மு.அ. பரமசிவம் செட்டியார் - அங்கம்மாள் ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார்-பாப்பா ஆச்சி** குடும்பத்தார்,மதுரை
4. திரு. **தே.மா. பழனிச்சாமி செட்டியார் - பழ. சரஸ்வதி ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
5. தெய்வத்திரு. **தீ.பழ. பொன்னுச்சாமி செட்டியார் - அன்னமயிலி ஆச்சி,** நினைவாக **A.P. ஸேதுராமன் - விஜயலட்சுமி,** கோவை.

தங்கப்பதக்கம் வழங்கும் நன்கொடையாளர்கள் :

1. திரு. **அரு.சோம. சண்முகநாதன் - சிவகாமி,** தூத்துக்குடி.
2. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** பொன்னமராவதி.
3. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம், கல்வி வளர்ச்சிக் கழகம்,** பிரான்மலை
4. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** கோயம்புத்தூர்.

கனாக் காணுங்கள்

– M. சோலைராஜன், புழுதிபட்டி (அமெரிக்கா)

கல்லாதவன் கண்ட கழிநுட்பம் கற்றார்முன்
சொல்லுங்கால் சோர்வு படுதலால் – நல்லாய்
வினாமுந் துறாத உரையில்லை இல்லை
கனாமுந் துறாத வினை

பழமொழி நானூறு என்ற இலக்கியத்தில் அறிவு புகட்டும் வண்ணம் நம்மோடு பேசும் முதல் பாடல் இது. இனி வரும் பாடல்கள் சில முன்னிலையாக யாரேனும் ஒருவரை விளித்துச் சொல்லும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். அந்த வகையில் நல்லாய் நல்+ஆய்=நல்ல பெண்ணே அல்லது நற்குணமுடைய

பெண்ணே என அழைத்து அமைக்கபட்ட பாடல் இது.

இந்தப் பாடலில் வினா முந்துறாத விடையில்லை, கனா முந்துறாத வினையில்லை என இரண்டு பழமொழிகள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. வினா என்றால் கேள்வி. கேள்வி பிறந்தது இங்கே என்று தொடங்கும் திரைப்படப்பாடல் போல யாரெல்லாம் கேள்வி எழுப்புகிறார்களோ அவர்களுக்குத் தான் விடை கிடைக்கும் என்று சொல்கிறது. இந்தப் பழமொழி. இதே போல சில நற்செயல்கள் அல்லது தீச்செயல்கள் நடைபெறும் முன்பு நமக்கு அது தொடர்பான கனவுகள் வருவதுண்டு. அதனால்தான் கனா முந்துறாத வினையில்லை எனும் பழமொழி இந்தப் பாடலில் பயின்று வருகிறது.

இராவணனால் கடத்திச் செல்லப்பட்ட சீதாபிராட்டியார் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அசோகவனத்தில் சீதைக்குச் சுற்றிக் காவல் இருந்த அரக்கியர் எப்படியிருக்கிறார்கள்? வயிற்றில் வாய் உடையவள், நெற்றியில் கண் உடையவர்கள், மூன்று கண் உடையவர்கள் கொடுங்கண்கள் உடையவர்கள், ஈறுகளுக்கு இடையே யானை, யாளி, பேய் எல்லாம் உறங்கும் அளவுக்கு அகண்ட வாயுடையவர்கள், பத்துக் கையுடையோர், இருபது தலையும் இரண்டு கைகளும் உடையவர்கள், யானை,

குதிரை, வேங்கை, கரடி, யாளி, பேய், சிங்கம். நரி, நாய் என வகைவகையான முகங்கொண்டவர்கள் என்று அரக்கியர்கள் சூழ அச்சத்தில் உறைந்து போயிருக்கும் அன்னை சீதைக்கு ஆறுதல் கூற ஒரே ஒருத்தி மட்டுமே இருந்தாள், அவள் விபீஷணன் மகள் திரிசடை ஆவார்.

சீதாதேவிக்கு ஆறுதல் கூறத் தான் கண்ட கனவொன்றை விவரித்துக் கூறுகிறாள் திரிசடை. இராவணன் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு பேய்களும் கழுதைகளும் பூட்டிய தேரில் தென்திசை போகக் கண்டேன். அவன் மட்டுமல்ல, அவன் மக்களும் சுற்றமும் கூடப் போனார்கள். நகரில் இருந்த தோரணக் கம்பங்கள் ஒடிந்தன. யானைகளின் தந்தங்கள் முறிந்தன. பூரணக் கும்பத்திலிருந்த புனித நீர் கள்ளைப் போல் பொங்கி வழிந்தது. மங்கையர்களின் தாலியெல்லாம் தாமே இற்று வீழ்ந்தன. மண்டோதரியின் கூந்தலும் அவிழ்ந்து துர்நாற்றம் நாறின. இன்னும் கேள். இரண்டு சிங்கங்கள் புலிக் கூட்டத்தோடு இங்கு வந்து மத யானைகள் வாழும் வனத்தை வளைத்து அவற்றோடு போர் செய்தன. யானைகள் கூட்டம் கூட்டமாக வீழ்ந்து பட்டன. அந்த வனத்திலிருந்து மயிலும் பறந்து போனது. அதே நேரம் ஓர் அழகான பெண் இராவணன் அரண்மனையிலிருந்து அடுக்குதீபம் ஏந்தியபடி வீடணன் அரண்மனைக்குச் சென்றாள். இந்தச் சமயம் நீ என்னை எழுப்பி விட்டாய் என்கிறாள்.

இதைக் கேட்ட சீதை அக்கனவின் உட்பொருளை ஒருவாறு உணர்ந்து கொள்கிறாள். இராவணன் குலத்தோடு அழியப் போகிறான். இரண்டு சிங்கங்களும் இராம இலக்குவர்களைக் குறிக்கின்றன. அந்த மயில் தன்னைக் குறிக்கிறது என்பதையும் தெரிந்து கொள்கிறாள். அவள் கவலையெல்லாம் பறந்து சென்ற மயில் எங்கே போனது? எனவே கனவின் முடிவைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் கை கூப்பி அன்னையே இன்னும் துயில்க. அதன் குறைகாண் என்று வேண்டிக் கொள்கிறாள். இப்படித் திரிசடை கண்ட கனவுகளைக் குறித்து கம்ப இராமாயணம் விரிவாகச் சொல்லும். பின்னாளில் இக்கனவுகள் பலிக்கவும் செய்தன அல்லவா. இல்லை கனாமுந் துறாத வினை என்னும் பழமொழியின் விளக்கக் கதை இது.

எனினும் கனவுக்கும் நிகழ்வுக்கும் தொடர்புபடுத்துவது மூட நம்பிக்கை என்று இன்றைய அறிவியல் உலகம் மறுக்கும். அப்படியானால் இந்தப் பாடலில் வரும் கனவு என்பதை எப்படிப் புரிந்து கொள்வது, கனவு என்றால் திட்டம் என்று புதுமைப்பொருள் கொள்வோம். வரைபடம் இருந்தால் தானே வானுயர் கட்டடங்களை எழுப்ப முடியும். கனவு காணுங்கள் என்று இளைஞர்களை வேண்டினார் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள். அப்படிக் கனவு காண்பவர்களால் மட்டுமே சாதனையாளர்களாக முடியும்.

முனைவர் பட்ட ஆய்வுரையைச் சமர்ப்பிக்கும்போது நூல் கற்றவர்கள் முன் அந்த ஆய்வைச் சமர்ப்பித்து அவர்கள் எழுப்பும் வினாக்களுக்கு ஏற்ற, தக்க விடையளிக்க வேண்டும். அவ்வாறு ஏற்ற பதில் அளிக்காதோர் முனைவர் பட்டம் பெறத் தகுதியற்றவர் ஆகி விடுவர். எப்படி விடைகளுக்கு முன் வினாவோ, செயல்களைத் தொடங்கு முன் திட்டமோ அப்படி நுண்பொருள் ஆகிய கழிநுட்பத்திற்கான முன் தேவை கல்வி என்று இந்தப் பழமொழிப் பாட்டு உள்ளுறையாக நமக்கு எடுத்துரைக்கிறது.

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத் தூறும் அறிவு

என்னும் திருக்குறளையும் இந்தப் பழமொழிப் பாடலோடு இணைத்துப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

6ஆம் வகுப்பில் முதலிடம் பிடித்த நம்மவரின் மகள்

திருச்சி ஹோலிகிராஸ் மெட்ரிக் ஹையர் செகண்டரி ஸ்கூலில் 6 ஆம் வகுப்பு படித்துவரும் மேலூருடையார் திருச்சி திரு A. பாஸ்கரன் – திருமதி B. கலையரசி, இவர்களின் மகள் **B. சுஷ்மிதா** முதலிடத்தில் தேர்ச்சி பெற்றதால் பள்ளி நிர்வாகம் இவருக்கு பதக்கமும், சான்றிதழும் வழங்கி கௌரவித்தது.

தகவல் : S. சோமசுந்தரம், அ. காளாப்பூர், செய்தித்தொடர்பாளர்.

6 ஆம் வகுப்பில் முதலிடம் பெற்று தனது பெற்றோருக்கு பெருமை சேர்த்துள்ள B.சுஷ்மிதா அவர்களை மேலும் பல விருதுகளைப் பெற வாழ்த்துகிறது. **– நிர்வாகிகள், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**

இறைவனடி சேர்ந்தார்

புதுக்கோட்டை வட்டார கல்வி அலுவலர் திருமதி சே. இராம திலகம் இராமலிங்கம், திரு Er. S. சரவணன், திருமதி தேன்மொழி, திரு சே. முத்துக் குமார், திருமதி செண்பகம், மைலா மெடிக்கல், திருமதி சே. லதா மீனாட்சி சுந்தரம் ஆகியோரின் தாயார் சிங்கம்புணரி தெய்வத்திரு மு. சேவுகன் செட்டியார் அவர்களின் மனைவி திருமதி **சே. சாவித்திரி ஆச்சி** (83), கோயம்புத்தூர் சிங்காநல்லூரில் 17.02.2026 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

தகவல் : திருமதி சே. இராம திலகம் இராமலிங்கம், பொன்னமராவதி

குளத்துப்பட்டி தெய்வத்திருமதி. மீனாள் ஆச்சி அவர்களின் கணவரும், திருமதி. இராஜேஸ்வரி, திரு. வைத்தியநாதன், திரு. இராஜேந்திரன், திரு. பூமிநாதன், திருமதி. லதா இவர்களின் தந்தையுமான திரு. AL. **சிவராமன் செட்டியார்** அவர்கள் 20.2.26 அன்று அதிகாலை 2.30 மணியளவில் இயற்கை எய்தினார்.

தகவல் : திரு. பூமிநாதன், கோவை.

சிறுகுடி பூர்வீகம் கோபால்பட்டி திரு. எஸ். அலங்காரம் செட்டியார் அவர்களது மனைவியும், திரு. சிவச்சந்திரன், திரு. லட்சுமிபதி இவர்களது தாயார் திருமதி. **ஜெயமணி ஆச்சி** (வயது 64) அவர்கள் 25.2.26 அன்று அதிகாலை 1.30 மணியளவில் இயற்கை எய்தினார்.

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜுலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜுலை 2007 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜுலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. **ஜனவரி 2012 :** பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜுலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழுகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குழுருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் - சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜுலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

20. **மார்ச் 2014 : பூதமங்கலமூருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

21. **ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

22. **மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

26. **ஜூலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம்** B.Sc., ACA., **– ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கழுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கழுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜூலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

33. **ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

34. **ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிப்பட்டி / கோவை.**

35. **ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**

36. மார்ச் 2020 : மேலூருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

37. அக்டோபர் 2020 : பொன்னமராவதி **பூண்டிஊருடையார்**
திரு. சி. வெள்ளைச்சாமி செட்டியார் - திருமதி. சாந்தி ஆச்சி, சிறுகுடி / கோவை.

38. டிசம்பர் 2020 : கழனிவாசலூருடையார் கிருங்காக்கோட்டை
திரு. V. லட்சுமணன் செட்டியார் - பாக்கியலட்சுமி ஆச்சி தம்பதியர்

39. மே 2021 : மேலூருடையார் செம்பூதி/பொன்னமராவதி தெய்வத்திருவாளர்கள்
தே.மா. சுப்பையா செட்டியார்- சுப. பூங்கோதை ஆச்சி

40. டிசம்பர் 2021 : **பாளையூர் அம்பலம்கொண்டார் ஒடுவன்பட்டி / தஞ்சை திரு. S. மாணிக்கம் செட்டியார் – திருமதி சுசீலா ஆச்சி**
41. பிப்ரவரி 2022 : **கழுகக்கூருடையார் கிருங்காக்கோட்டை/கோவை தெய்வத் திருவாளர்கள் தேனப்பன் செட்டியார் – சந்திரா ஆச்சி**
42. ஆகஸ்ட் 2022 : **அரும்பாக்கிளையார் – சிறுகுடி தெய்வத்திரு. ம.பொ. மாணிக்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. ம.பொ.மா. வேலுமயிலி ஆச்சி.**
43. ஜனவரி 2023 : உளுந்தூருடையார் **தெய்வத்திருவாளர் அரு. கிருஷ்ணன் செட்டியார் – நலமுடன் திருமதி சாவித்திரி ஆச்சி,** அ. காளாப்பூர்.
44. மே 2023 ஆமலூருடையார் **தெய்வத்திருவாளர்கள் சி. அண்ணாமலை செட்டியார் – பரஞ்சோதி ஆச்சி,** அம்மன்குறிச்சி.
45. மே 2023 நாவலூருடையார், **தெய்வத்திருவாளர்கள் வே. சண்முகநாதன் செட்டியார் – குஞ்சரத்தம்மை ஆச்சி,** உலகம்பட்டி.
46. ஜுலை 2023 கழனிவாசலூருடையார் குளத்துப்பட்டி தெய்வத் திருவாளர்கள் **அரு. அறிவுச்செல்வன் செட்டியார் – பாக்கியம் ஆச்சி & மூத்த மகள் சுப. பரிமளம் ஆச்சி.**
47. நவம்பர் 2023 மேலூருடையார் **அ.கு. நடராஜன் – தெய்வத்திருமதி ந. மீனாம்பாள் ஆச்சி,** சொக்கம்பட்டி.
48. நவம்பர் 2023 மேலூருடையார் **தெய்வத்திரு க.அ. அலங்காரம் செட்டியார்** சிறுகுடி.
49. ஜனவரி 2024 மேலூருடையார் **Rm.A. கண்ணன் செட்டியார் – க. அன்பு பிரியாள் ஆச்சி,** சிறுகுடி/கோவை
50. செப்டம்பர் 2023 – கல்வாசநாட்டு சுந்தர பாண்டியபுரத்து நன்னெறி பூண்டிலுருடையார் (சொக்கம்பட்டி) சென்னை திரு **A.S. முருகேசன் செட்டியார் – மு. கலைச்செல்வி ஆச்சி.**
51. வரதலூருடையார் **R. ராமச்சந்திரன் செட்டியார் – ரா. மணிமேகலை ஆச்சி,** கிருங்காக்கோட்டை / கோவை
52. மேலூருடையார் தெய்வத்திருவாளர்கள் **செ. செம்பன் செட்டியார் – பொன்னம்மாள் ஆச்சி,** சிறுகுடி.
53. ஆமலூருடையார் **திரு. மா. முருகானந்தம் – இந்திரா தேவி ஆச்சி,** அம்மன்குறிச்சி – சென்னை
54. நாவலூருடையார் **திருமதி. மீனாட்சி ஆச்சி,** உலகம்பட்டி – கோவை.
55. வரதலூருடையார் **திரு. ந. ஜெகநாதர் – திருமதி. மா. கண்மணி,** புழுதிபட்டி – திண்டுக்கல்.
56. கமுகக்கூருடையார் திரு. **தே.மு. கணேசன் செட்டியார் – திருமதி. க. யோகம்,** கிருங்காக்கோட்டை, சென்னை.
57. வரதலூருடையார் திரு. **ந.பி. நடராஜன் செட்டியார் – ந. தெய்வானை ஆச்சி,** புழுதிபட்டி.
58. நாவலூருடையார் **உயர்திரு. ச.சொக்கலிங்கம் செட்டியார்** – **தெய்வத்திருமதி சொ.தனபாக்கியம் ஆச்சி.** உலகம்பட்டி.
59. மேலூருடையார் தெய்வத்திருவாளர்கள். **தீ.ப. பொன்னுச்சாமி செட்டியார் – அன்னமயிலி ஆச்சி** பொன்னமராவதி / கோவை
60. பொன்னமராவதி திருவப்பூருடையார் **திரு. பெ. சின்னதுரை செட்டியார் - திருமதி. ஜீவராணி ஆச்சி,** சொக்கம்பட்டி / கோவை.
61. **திரு. சேது நாகராஜன் - திருமதி. சுதா நாகராஜன்,** சென்னை / சிங்கப்பூர்.

அ.வ.ந. பொதுநலச் சங்கம் பிரான்மலையில் சிறப்பாக நடத்திய மண்டப விநாயகர் மகாஅபிஷேகம் மற்றும் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்ச்சி

நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம்

விசுவாசு வருடம் தை மாதம் 18 ஆம் நாள் 1.2.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பிரான்மலை மங்கைநாயகர் மண்டபத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் எட்டி மண்டப விநாயகர் மற்றும் ஸ்ரீலஸ்ரீ உமாபதி தேசிகர் ஆகியோருக்கு சுமார் 60 ஆண்டுகள் கழித்து கும்பாபிஷேகம் போன்று மகா அபிஷேகம் செய்யும் முகத்தான் முதலாவதாக பாலாலயம் செய்யப் பெற்றது.

மதியம் அருள்மிகு வள்ளி தெய்வானை உடனாகிய சுப்பிரமணியர் சுயம்பெருமாள் ஆற்றிற்கு எழுந்தருளி தீர்த்தவாரி நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது அனைத்து ஊர் நகரத்தார்கள் மற்றும் ஊரார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

மாசி மாதம் ஒன்றாம் தேதி 13.2.2026 வெள்ளிக்கிழமை காலை நமது மண்டபத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் தொடர் பாராயணம் நிகழ்ச்சி இனிதே தொடங்கியது. கடந்த ஒரு மாத காலமாக தினமும் சுமார் 60 நபர்கள் கலந்து கொண்டு பன்னிரு திருமறையில் உள்ள 18363 பாடல்களையும் பாராயணம் செய்த நிகழ்வு எல்லாம் வல்ல மங்கைபாகர் தேனம்மை அருளால் சிறப்பாக நடந்து 8.3.2026 ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவுபெற்றது.

முற்றோதல் நிகழ்வை முன் நின்று வழிநடத்திய திருமதி ஞானேஸ்வரி சுப்பிரமணியம் மற்றும் பொன்னமராவதி ஆடல் அரசர் திருச்சபை குழுவினருக்கு பொது நலச்சங்கத்தால் பாராட்டு

தெரிவிக்கப்பட்டது. அவர்களும் பொதுநலச் சங்கத்திற்கும் நகரத்தார் பெருமக்களுக்கும் தங்களது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். அனைத்து ஊர் நகரத்தார்களும் வெகு சிறப்பாக அறக்கொடைகளை அள்ளி வழங்கி பேராதரவு நல்கினர்.

7.3.2026 மாலை முதல்கால யாக வேள்வியுடன் பிரான்மலை மண்டபத்தில் எழுந்தருளியுள்ள எட்டி மண்டப விநாயகர் மற்றும் ஸ்ரீலஸ்ரீ உமாபதி தேசிகர் ஆகியோருக்கு மகா அபிஷேகம் நிகழ்வானது தொடங்கியது. அதனைத் தொடர்ந்து அன்று இரவு மருந்து சாத்தும் நிகழ்வும் நடைபெற்றது.

8.3.2026 அன்று காலை இரண்டாம் கால யாக வேள்வி மற்றும் மகா அபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. அனைத்து ஊர் நகரத்தார்களும் திரளாக கலந்து கொண்டனர்.

தகவல் : சொ. செந்தில்குரு, செயலாளர், (நிர்வாகம்) அ.வ.ந. பொதுநலச் சங்கம்

அருள்மிகு மங்கைபாகர் தேனம்மை திருக்கோவில், பிரான்மலை
சித்திரைத் திருவிழா

21.4.26 சித்திரை 8 செவ்வாய்	காப்புக்கட்டுதல் & கொடியேற்றம்
25.4.26 சித்திரை 12 சனிக்கிழமை	திருக்கல்யாணம்
26.4.26 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை	ஆறாம் திருவிழா
27.4.26 சித்திரை 14 திங்கள் அதிகாலை	பஞ்சமூர்த்திகள் வீதி உலா புறப்பாடு
29.4.26 சித்திரை 16 புதன்	திருத்தேரோட்டம்

89
வருட பட்டு
பாரம்பரியம்
இளவரசிகள் இப்போது மகாராணிகளாய்
ஆதிகாலத்தின் தீர்காயூஷ் பட்டுப்புடவைகளோடு...
ஆடைகளின்
அரண்மனை
1936
®
ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
பொன்னமராவதி | புதுக்கோட்டை | தஞ்சாவூர்
விசாலமான கார்
பார்க்கிங் வசதி உண்டு
CUSTOMER CARE :
82200 82202 (PDKT)
82200 82201 (PMV)
வெள்ளிக்கு
தனிப்பிரிவு
செட்டிநாட்டு வெள்ளி
பொருட்கள் கிடைக்கும்

61 வது கல்விக்காவலர்
திரு. சேது நாகராஜன் - திருமதி சுதா நாகராஜன் பெற்றோர்கள்

கல்விக்காவலர் திரு. சேது நாகராஜனின் பெற்றோர்கள்:
தெய்வதிருமதி. சிந்தாமணி ஆச்சி & தெய்வதிரு. சேது பாண்டியன் செட்டியார்
கிருங்காக்கோட்டை

கல்வி காவலர் திருமதி. சுதா நாகராஜனின் பெற்றோர்கள்:
திருமதி டெய்சி இராணி சின்னான் செட்டி & திரு. ராம சின்னான் செட்டி.
அம்பத்தூர், சென்னை